# தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 106
தொலைபேசி எண். 2475 3001 நிகரி 2475 3300, 24751870
மின் அஞ்சல் tnsec@tn.nic.in இணையதளம் www.tnsec@tn.nic.in


---

## செய்தி வெளியீடு


செய்தி வெளியீடு எண். 10/2011 நாள். 23 .09.2011


தமிழ்நாட்டில், உள்ளாட்சித் தேர்தல் அக்டோபர் 17, 19 ஆகிய நாட்களில் இருகட்டங்களாக நடைபெற உள்ளன. இதனை அடுத்து தேர்தல் நன்னடத்தை விதி முறைகள் முழுமையாக அமல்படுத்தப்பட்டுள்ளன.

ஈரோடு மாவட்டத்தில், அக்டோபர் 17ம் தேதி முதல் 22ம் தேதி முடிய இராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் முகாம் நடைபெற உள்ளதாகவும், அதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும், இவ்வாணையத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், தேர்தல் விதிமுறைகள் தற்போது அமலில் உள்ளதால், ஈரோட்டில் இராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் இம்முகாமினை தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் முடிவுக்குப்பின் மேற்கொள்ள தேவையான ஏற்பாடுகள் செய்திட ஈரோடு மாவட்ட ஆட்சியருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய ஆணைப்படி)

(ஒம்) லோ.கிருஷ்ணமூர்த்தி,
மக்கள் தொடர்பு அலுவலர்